**புத்தளம் நகர சபை**

**புத்தளம் மாவட்டம்**

------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

-----------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

---------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள், 2015 மார்ச் 30 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 31 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 13 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

-------------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு புத்தளம் நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

--------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-------------------------------------------

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) ரூபா 846,698 இற்கான கருவாட்டுக் கடையின் பெறுமதியை மாத்திரம் கணக்கீடு செய்திருந்ததுடன் சபைக்குச் சொந்தமான ஏனைய காணிகள் மற்றும் கட்டிடங்களின் பெறுமதியினைக் கணித்து கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஆ) ரூபா 8,133,480 இற்கான கலி பவுஸர் மற்றும் ரூபா 8,113,480 இற்கான நீர் பவுஸரின் பெறுமதியையும் நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை.

(இ) நடைமுறை ஆண்டின் நான்காவது காலாண்டு வீத வரி தண்டப் பணம் ஆகிய ரூபா 668,185 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஈ) 2014 ஆம் ஆண்டிற்கான நிர்மாண வேலைக்கான கூட்டுத்தொகை ரூபா 3,133,698 இனை வருமானக் கடன்பட்டோரின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை.

(உ) ஆதனக் கடன்வட்டி ரூபா 70,442 தொகையின் பெற வேண்டிய ஏனைய வருமானங்கள் என கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ஆழ் நிதியின் மீதி ரூபா 110,165 ஆக காணப்பட்ட போதும், அதனை ரூபா 119,338 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் ரூபா 9,173 தொகையின் ஆழ் நிதி கணக்கு மிகையாகக் காட்டப்பட்டுள்ளது.

(எ) மின் உபகரண வழங்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 834,500 தொகையொன்று செலுத்தியிருந்த போதிலும், அதனை மின் உபகரண வழங்கள் கடன்கொடுத்தோர் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டுள்ளமையால் அந்த கணக்கில் வரவு மீதி ஒன்றில் காட்டியிருந்தது.

(ஏ) ரூபா 7,447,364 இற்கான நிலுவை வீத வரி பெறுவனவுகள், நிலுவை வீத வரி கணக்கிற்கு செலவு வைக்கப்படாமையால் வீத வரி வருமானக் கணக்கு மற்றும் நிலுவை வீத வரிக் கணக்கு அதே தொகையால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஐ) மீளாய்வாண்டிற்காக பெற வேண்டிய வீத வரி ரூபா 10,942,413 தொகையினை கணக்கீடு செய்யப்படாமையால் வீத வரி வருமானம் மற்றும் பெற வேண்டிய வீத வரி அதே தொகையால் குறைவாக காட்டப்பட்டிருந்தது.

(ஒ) வீத வரிக் கழிவு என பெற்றிருந்த ரூபா 293,903 தொகையினை வீத வரி கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான வீத வரி வருமானம் அதே தொகையால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஓ) பெற வேண்டிய வீத வரி தண்டப் பணம் ரூபா 2,210,852 தொகையின் வீத வரிக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தமையால் பெறவேண்டிய வீத வரி தண்டப் பண வருமானம் அதே தொகையால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஔ) இலங்கை மின்சார சபையின் ஏற்பாடுகளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட 10 நிர்மாண வேலைகளுக்காக செலுத்த வேண்டிய தொகையை கணக்கீடு செய்யும் போது ரூபா 2,554,170 தொகை ஒன்று மிகையாகக் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(க) ரூபா 300,000 தொகையொன்று வருமானத்திற்கான வைப்புக் கணக்கில் இரண்டு தடவைகள் வரவு வைக்கப்பட்டிருந்ததுடன், மேலும் ரூபா 360 தொகையொன்று அக் கணக்கிற்கு பிழையான முறையில் செலவு வைக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக காணப்பட வேண்டிய ரூபா 54,640 இற்கான செலவு மீதிக்குப் பதிலாக இக் கணக்கில் ரூபா 244,999 இற்கான வரவு மீதி ஒன்று ஏற்பட்டிருந்தது.

(ங) பெறுமதி கூட்டிய வரிக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட வேண்டிய ரூபா 100,000 தொகை மற்றும் பதவியணிக் கடன் கணக்கிற்கு செலவு வைக்கப்பட வேண்டிய ரூபா 200,000 உம் முற்பணக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்ட காரணத்தினால் முற்பணக் கணக்கு ரூபா 300,000 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ச) முற்பணக் கொடுப்பனவு கணக்கிற்கு வரவு வைக்கப்பட வேண்டிய ரூபா 300,000 தொகை ஒன்று நாட்குறிப்பு இலக்கம் 282 இன் மூலம் வருமான முற்பெறுவனவுக் கணக்கு வரவு வைக்கப்பட்டமையால் வருமான முற்பெறுவனவுக் கணக்கு ரூபா 300,000 இனால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஞ) 2012 அண்டு முதல் முன் கொண்டு வரப்பட்டிருந்த வருமான முற்பெறுவனவு ரூபா 54,640 தொகை மீளாய்வாண்டு இறுதி வரை தீர்க்கப்படாமல் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---------------------------------------------------------------------------------------

04 கணக்கு விடயங்கள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் காணப்பட்ட மீதிகள் மற்றும் துணைப் பதிவேடுகளில் காணப்பட்ட மீதிகளில் இடையே ரூபா 1,644,487 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 03 நடைமுறை கணக்குகளில் காணப்பட்ட மீதிகள் மற்றும் காசேட்டின் வங்கி மீதிகளிடையேயும் வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டன.

1.3.3 தொங்கல் கணக்குகள்

-------------------------------------

பல வருட காலம் முதல் நிதிக் கூற்றுக்களில் முன்கொண்டு வரப்படும் 03 கணக்குகளில் வரவு மற்றும் செலவு மீதிகள் 2012 ஆண்டின் போது ஒவ்வொன்றையும் சீராக்கல் மேற்கொண்டு ரூபா 175,949 இற்கான ஒரு வரவு மீதியாக பொதுப் பேரேட்டில் காட்டப்பட்டிருந்த போதிலும், 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அம் மீதி நடைமுறை சொத்துக்களின் கீழ் ரூபா 190,650 தொகை என வைப்புக்கள் எனக் காட்டப்பட்டிருந்தது.

1.3.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

--------------------------------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டியிருந்த கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 114,911,497 ஆகக் காணப்பட்டதுடன், அத் திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 144,487,225 ஆகும். அதே போல் அம் மீதியில் முறையே ஒரு வருடத்தை மிகைத்த மீதிகளாக ரூபா 83,823,878 தொகையும் ரூபா 59,129,658 தொகையும் காணப்பட்டது.

(ஆ) 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 9,532,329 தொகை ஒன்று ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்திற்கு செலுத்த வேண்டியிருந்ததுடன் அத் திகதியில் உள்ளவாறு 11 வருடங்களை விட கூடிய காலம் முதல் அறவிடப்பட வேண்டிய பதவியணிக் கடன் முற்பணங்களின் கூட்டுத்தொகை ரூபா 1,814,021 தொகையாகும். அவற்றில் இறந்துள்ள, ஓய்வு பெற்றுள்ள, சேவை விட்டுச் சென்றுள்ள மற்றும் இடமாற்றம் பெற்றுள்ள 95 ஊழியர்களிடம் அறவிடப்பட வேண்டிய கடன்களின் பெறுமதி ரூபா 176,178 ஆகும்.

(இ) 06 வருடங்களை விட மிகையான காலம் முதல் அசையாது காணப்படும் நடைமுறைச் சொத்துக்களின் கூட்டுத்தொகை ரூபா 4,365,278 தொகையாகும்.

1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

------------------------------------------------------------------

12 கணக்கு விடயங்கள் தொடர்பாக சில தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 168,362,654 இற்கான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றி விரிவான பரிசோதனை ஒன்று மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது.

1.3.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

----------------------------------------------------------------------------------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

(அ) நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 177(2) இன் பிரகாரம் சான்றுபடுத்திய கணக்கு கூற்றில் பொழிப்பொன்று பொது மக்கள் அறிந்து கொள்வதற்காக தொடர்ந்து வரும் மார்ச் மாதம் 01 திகதிக்கு முன்னர் அரசாங்க வர்த்தமானியில் வெளியிட வேண்டும் எனினும் அவ்வாறு செய்திருக்கவில்லை.

(ஆ) வடமேல் மாகாண நிதி விதி 51.2 பிரகாரம் சபைக்கு அறவிடப்பட வேண்டிய கட்டணம் மற்றும் வரி சேகரிக்கும் அலுவலரினால் முறையற்ற விதமாக வருமானத்தை நிலுவையாவதற்கு இடமளிக்காமல் இருப்பதற்கு பொறுப்பாக இருக்க வேண்டும். எனினும் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை வருமானம் ரூபா 86 மில்லியன் போன்ற உயர் பெறுமதி ஒன்றினை கொண்டிருந்தது.

(இ) வடமேல் பிரதான செயலாளரின் 2010 மே 13 திகதிய இலக்கம் 5/3/நிதி சுற்று நிருபம்/2010 கொண்ட சுற்று நிருபத்தின் பிரகாரம் காலம் கடந்துள்ள எனினும் திருப்பிச் செலுத்த வேண்டிய வைப்புக்கள் ரூபா 6,736,170 தொடர்பா உரிய முறையில் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2. நிதி மீளாய்வு

------------------------

2.1 நிதி விளைவுகள்

-------------------------------

சமர்ப்பித்திருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 41,642,916 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 9,402,624 ஆகும். மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது முறையே ரூபா 85,215,939 உம் மற்றும் ரூபா 15,993,110 உம் ஆக மூலதன உதவி மற்றும் முறையே ரூபா 106,249,980 உம் மற்றும் ரூபா 22,610,598 இற்கான மூலதன செலவுகளை கணித்த பின்னர் மீளாய்வாண்டின் ரூபா 20,608,875 உம் மற்றும் முன்னைய ஆண்டின் ரூபா 2,785,136 இற்கான மிகை ஒன்று ஏற்பட்டு காணப்பட்டது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டிற்கு நேரொப்ப மீளாய்வாண்டின் போது நிதி விளைவுகளில் ரூபா 17,823,739 இற்கான முன்னேற்றமொன்று ஏற்பட்டிருந்தது.

2.2 வருமான நிருவாகம்

----------------------------------

2.2.1 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

----------------------------------------------------------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | | 2014 | | | 2013 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட | உள்ள வாறான | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிலுவை | மதிப்பிடப்பட்ட | உள்ள வாறான | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிலுவை |
| | | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| (அ) | வீதவரி | 15,894 | 4,852 | 57,424 | 16,536 | 4,538 | 53,929 |
| (ஆ) | வாடகை | 32,770 | 30,399 | 19,613 | 29,862 | 28,681 | 22,153 |
| (இ) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,268 | 492 | 3,563 | 1,185 | 822 | 3,564 |
| (ஈ) | ஏனைய வருமானங்கள் | 14,050 | 37,462 | - | 15,550 | 18,451 | (2,584) |

2.2.2 பகுப்பாய்வு ரீதியாக நிதி மீளாய்வு

-----------------------------------------------------------

(அ) மீளாய்வாண்டின் போது மதிப்பிடப்பட்ட மூலதனச் செலவுகளில் ரூபா 432,159,072 தொகை செலவிடப்பட்டிருக்கவில்லை. அவை சதவீதமாக நூற்றிற்கு 80 ஆகும்.

(ஆ) 4 வருமான விடயங்களில் முன்னைய ஆண்டு இறுதியில் உள்ளவாறு திரண்ட நிலுவையில் மற்றும் மீளாய்வாண்டிற்கான மதிப்பீட்டு வருமானத்தின் கூட்டுத்தொகை ரூபா 161,255,641 ஆகக் காணப்பட்டதுடன், மீளாய்வாண்டிற்கான உள்ளவாறான வருமானம் 73,206,835 ஆகக் காணப்படாமையால் வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை நூற்றிற்கு 45 ஆகிய கீழ் மட்டத்தில் காணப்பட்டது.

2.2.3 முத்திரைக் கட்டணம்

-----------------------------------

பிரதான செயலாளரிடம் கிடைக்க வேண்டிய மொத்த முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 7,900,350 ஆகக் காணப்பட்டதுடன், அவற்றில் ரூபா 4,003,869 தொகை பெறுமதியான முத்திரைக் கட்டணம் கிடைத்திருந்ததுடன் மேலும் ரூபா 3,896,481 இற்கான முத்திரைக் கட்டண வருமானம் கிடைக்க வேண்டியிருந்தது.

2.2.4 வீத வரி

---------------

ஆண்டிற்கான வீத வரி பில் போடப்பட்ட தொகை ரூபா 15,794,734 ஆகக் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டு ஆரம்பத்தில் முன்கொண்டு வந்த நிலுவை ரூபா 53,929,423 ஆகும்.

மீளாய்வாண்டின் போது பில்போடப்பட்ட வீத வரியில் ரூபா 4,852,322 தொகை ஒன்று அறவிடப்பட்டிருந்ததுடன், நிலுவை தொகையில் அறவீடு செய்யக் கூடியதாக இருந்த வருமானம் ரூபா 7,447,365 ஆகும். இதன் பிரகாரம் பில் போடப்பட்ட வருமானத்தை அறவீடு செய்யும் சதவீதம் நூற்றிற்கு 30 ஆக காணப்பட்டதுடன், நிலுவைத் தொகையில் வருமானம் அறவீடு செய்யும் சதவீதம் நூற்றிற்கு 14 மாத்திரமே.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------

### 3.1 செயலாற்றுகை மதிப்பீடு

-------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 ஆண்டின் போது மேற்கொள்ளாத திட்டமிட்டிருந்த ரூபா 5,775,000 பெறுமதியான 10 நிர்மாண வேலைகள் மேற்கொள்வதற்கு இயலாமல் போயுள்ளது.

(ஆ) மதிப்பீட்டுச் செலவு ரூபா 520,000,000 இற்கான 07 அபிவிருத்தி செயற்திட்டங்கள் மேற்கொள்வதற்காக சபை போதிய பங்களிப்பு ஒன்றினை காட்டியிருக்கவில்லை. மதிப்பிடப்பட்ட நிர்மாண வேலைகளுக்காக உள்ளவாறான மேற்கொள்ளப்பட்ட செலவு ரூபா 6 மில்லியன் என காணப்படாமையால் அது தொடர்பாக சபை காட்டியுள்ள பங்களிப்பு நூற்றிற்கு 1 மாத்திரமே.

### 3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

----------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 மற்றும் 2004 ஆண்டுகளின் போது இரண்டு அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக பெற்றிருந்த கடன் தொடர்பாக ரூபா 943,682 இற்கான கடன் தவணையும் வட்டியும் ரூபா 440,629 நிலுவையாகக் காணப்பட்டது.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட ஆளணிக் கோப்பின் பிரகாரம் தீ அணைப்புப் படையினர் 09 பேர் கடமையாற்ற வேண்டும். எனினும், அவ்வாறு காணப்படாமையால் தீ அணைப்பு வாகனம் பல வருட காலமாக செயற்படாது காணப்பட்டது.

(இ) நிறுவனத்தில் போதிய அகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டு தொடர்பாக சபை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் 04 தடவைகள் கூட வேண்டியிருந்தது. எனினும் அவ்வாறு செய்திருக்கவில்லை.

(உ) 02 நிறைவேற்றுத் தர பதவிகள், 21 இரண்டாம் தரப் பதவிகள் என்பன வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் 65 ஆரம்பத் தர பதவிகளுக்கான மிகை ஒன்றும் காணப்பட்டது.

(ஊ) ஊழியர் சேமலாப நிதியத்திற்கு மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கும் செலுத்தப்பட வேண்டிய பங்களிப்புத் தொகை குறிப்பிட்ட திகதியில் செலுத்தப்படாமையால் சபைக்கு ரூபா 286,938 இற்கான மிகை விதிப்பு விதிக்கப்பட்டிருந்ததால் தொடர்ந்து சபைக்கு நட்டமேற்பட்டுள்ளது.

3.3 பயன்படுத்தப்படாத மற்றும் குறைபயன்பாட்டு சொத்துக்கள்

-----------------------------------------------------------------------------------------------

ரூபா 4,234,130 பெறுமதியான 06 சொத்து விடயங்கள் மற்றும் பெறுமதியினை மதிப்பீடு செய்ய முடியாத பழைய அலுவலக கட்டணமொன்றும் பல வருட காலமாக பயன்படுத்தப்படாமலும் குறைபயன்பாட்டுடனும் காணப்பட்டது.

4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) அகக் கட்டுப்பாடு

(இ) நிதிக் கட்டுப்பாடு

(ஈ) வருமான நிருவாகம்

(உ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஊ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு